ஒரு சமயம் அரசரிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வழியின்றித் தவித்த தெனாலி ராமன் கடனைத் தீர்க்க ஒரு உபாயம் செய்தான் அதன் பிரகாரம் கடனை வசூலிக்க இராமனின் வீட்டுக்கு இராயர் வந்தபொழுது இராமனின் மனைவி,

**“அரசே கடன் பாரம் தாங்காமல் என் கணவர் கவலைப் பட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். கடன் தீர்ந்து விட்டதென்று தாங்கள் அவர் காது குளிரச் சொன்னால்தான் அவருடைய ஆத்மா சாந்தியடையும்!”** என்றாள்.
அப்போது இராயர் மனம் வருந்தி, **“ராமா! நீ எனக்குத் தரவேண்டிய கடன் தீர்ந்துவிட்டது. கவலையின்றி நீ சாகலாம்”** என்றார். அதைக் கேட்டதும் படுக்கையில் கிடந்த இராமன் குபீரெனத் துள்ளியெழுந்து **“அரசே! தாங்கள் கொடுத்த கடனால் சாகக்கிடந்தேன். கடன் தீர்ந்ததென ராஜவாக்குக் கிடைத்ததும் புத்துயிர் பெற்று எழுந்துவிட்டேன்”** என்று சிரித்தான்.

TamilBo